உ
கணபதி துணை



யாழ்ப்பாணம் — தெல்லிப்பழை
பாலர் ஞானோதய சபை ஸ்தாபகரும்,
தலைவரும்
காசிபகோத்திர திலகருமாகிய

# பிரம்மஸ்ரீ. மு. சிவகடாக்ஷக் குருக்கள்

அவர்களின்


# நினைவு மலர்

வெளியிடுவோர் :
பழைய மாணவர்கள், பாலர் ஞானோதய சபை

சாதாரண வருடம் கார்த்திகை மாதம்
1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரம்மஸ்ரீ

முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் – சிவகடாக்ஷக் குருக்கள்

தோற்றம்: 26 – 9 – 1889 மறைவு: 14 - 12 - 1970

T. P. C.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள்

அவர்களின்

## வாழ்க்கைச் சுருக்கம்

இற்றைக்கு எண்பத்தொரு ஆண்டுகளுக்கு முன் நெல்லிப்பழை என்னும் திருப்பதியிலே முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் என்னும் பெருந்தகைக்கும் சிவகாமி அம்மையாருக்கும் புத்திரராகப் பிறந்தார். இவர் சிறு பிராயத்தில் உள்ளூர்ப் பாடசாலையில் கல்வி பயின்றபின் தமிழ், ஆங்கிலம், சமக்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லுனரானார். அதன்மேல் பன்னிரண்டு ஆண்டுகளாகச், சேர் கனகசபை வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். பின்னர் தந்தையாரின் கட்டளைக்கிணங்க ஆசிரியத் தொழிலை விட்டு விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்யும் பணியை மேற்கொண்டார். இவருக்கு சகோதரி ஒருவர் பதினன்கு ஆண்டு காலம் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். விநாயகப் பக்தராக விளங்கிய இப் பெரியார் விநாயகப் பெருமானுக்கு நித்திய நைமித்தியங்களை வழுவின்றிச் செய்து வந்தார். அஞ்ஞான்று புன்னலைக்கட்டுவனில் வசித்த சிவஞானக் குருக்களின் புத்திரியாகிய செல்வநாயகி அம்மையாரை விவாகஞ் செய்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார். இல்லறத்தின் பயனுகக் கணேசலிங்க ஐயர் என்னும் புத்திரர் பிறந்தார்.

காசிவிநாயகர் ஆலயத்தைச் சிறப்படையச் செய்ய வேண்டும் என்னும் பெருவிருப்பம் காரணமாகக் கோயில் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தார். பின் ஆசாரிய அபிஷேகம் செய்யப்பெற்று பல கிரியைகளையும் சிறப்பாக நடாத்தி வந்தார். குருக்கள் அவர்கள் வித்தியாசாலையில் கற்பிக்கும் தொழிலைத் துறந்து பூஜாகாரியத்தில் ஈடுபட்டபோதிலும் தந்தையார் நடாத்தி வந்த திண்ணைப் பள்ளியில் கல்வி கற்பித்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1946ஆம் ஆண்டு தை மாதம் தமிழுக்கு 25ஆந் திகதி ''பாலர் ஞானோதய சபை'' என்னும் நாமத்துடன் இச் சபையை ஸ்தாபித்து சமயம், கலை முதலியவற்றின் விருத்திக்காக அல்லும் பகலும் உழைத்து வந்தார்.

1968ஆம் ஆண்டு ஆனி மாதம் காசிவிநாயகர் ஆலயம் புனருத்தாரணம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. 1971ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசித்தோம். அதற்கிடையில் விநாயகப் பெருமானின் திருவடியில் இரண்டறக் கலந்து விட்டார்.

---

# சொல்லவும் பெரிதே சொல்லவும் பெரிதே

பிரமஸ்ரீ வ. குகசர்மா

### வெண்பா

சொல்லவும் சீர்பெரிதே சேரைங் கரன்றாள்கள்
வல்லமறை சொற்றிறமே வந்தித்து — நல்லவனாய்
பாலர் மனதில்பண் பாரிறை சிந்தனையை
ஞாலமதிற் சேர்த்தகுரு பண்பு.

சாற்றுசா தாரணவிற் கார்த்திகையீர் பத்தொன்பான்
போற்றுதுதி யைபின் புநர்பூசம் — ஏற்றபுகழ்
தெல்லிச் சிவகடாட் சக்குருக்கள் ஈசனடி
புல்லினா னென்றே புகல்.

### அகவல்

சொல்லவும் பெரிதே சொல்லவும் பெரிதே
சிவகடாட்சக் குருவே நின்சீர் புவியில்
சொல்லவும் பெரிதே சொல்லவும் பெரிதே
சீரிய ஒழுக்கமும் வேதமும் பயின்ற
அந்தண குலத்து அறிவனா யுதித்தனை
கருணை பொழியும் காசி விநாயகர்
அருளினைப் பெற்றாய் ஆங்கவன் பூவடி
நீங்கா வன்பு நிலையீஇய நெஞ்சொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசனை புரிந்து பெருந்தவம் புரிந்தாய்
வெள்ளைத் துகிலென உள்ளம் பொலியும்
கள்ளம் படியாப் பாலர்கள் மனதில்
தெய்வ உருவினைத் தெளியச் செய்திட
சங்க மமைத்தாய் பங்கமில் லருளின்
திறத்தை மனதில் பதித்திட வைத்தனை
ஈசனைப் பாடும் இயல்பினை யாக்கினை
என்னே நின்னருள் என்னே நின்தயை
**சிவகடாட்சக் குருவே** நின்சீர் புவியில்
சொல்லவும் பெரிதே சொல்லவும் பெரிதே.

## கட்டளைக் கலித்துறை

மல்லார் புயமுடை மைந்தன் கலங்கி மனம்மறுக
வில்லார் புருவ மருகி அழுதுகண் ணீர்பொழிய
சொல்லார் வமுறு சுற்றமும் மாணவர் சோர்வுறவும்
எல்லார் முகம்மங்கிட சென்றவன் சார்ந்தனை சொல்லுதியே.

பார்வையை ஈர்த்திடும் வேடமும் அன்பு பொலிவழகும்
சோர்வினை நீக்கிடு சொல்லும் திகழ்வுறு மைங்கரன்பால்
ஆர்வம் பெருகிய அன்புறு சிந்தையும் அகங்குழைவும்
சேர்வல் வினையறு செய்கையும் கண்டிடல் கூடுவதோ.

## எண்சீர் விருத்தம்

கற்றோர் காமுறு மின்சொலும் புன்னகையும்
திரிபுண்டர நீற்றணி நெற்றி யொளியதுவும்
வற்றாத அன்புறு உள்ளமும் மார்பசையும்
கண்டிகை முந்நூலொடு உத்தரீயத் தழகும்
நற்றாமரைக் கரந்தனில் தண்டேந்தி அசைந்த
நடையழகும் பட்டுடைசேர் மருங்கழகும்
அற்றே மறைந்திடச் சென்றனை இங்குள்ளார்
அருந்துயர் அறைந்திட அளவிடற் கரிதே.

காசியி லிங்கரன் றுள்களைநீ புரிபூசனை
ஆசில வாதலு மதுகண்டு விண்ணுலகில்
தூசி லருச்சனை செய்வித்து வணங்குதற்கோ
பேசி லாங்குனை அழைத்தனர் அத்தேவர்களே.

## ( வெண்பா )

"சேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த் தெளிவால்
வாட்டமுறு வுற்பவ நோய் மாறுமோ — நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றேகாண்.
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்." **தாயுமானவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தண்மை வாய்ந்த அந்தணர் திலகம்

தெ. து. ஜெயரத்தினம், J.P., B.A. (Lond)

அதிபர், மகாஜனக்கல்லூரி. தலைவர், தெல்லி. துர்க்காதேவிஆலயம்.

''பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.''

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. ஆறுமுகநாவலர் காலத்தில் தோன்றிய சைவசமய விழிப்புணர்ச்சி தெல்லிப்பழை யிலும் பரவியகாலையில் ஆலயங்களைச் சிறப்பாகப் பேணிப் பூசை புரிந்தும், சைவவித்தியாசாலைகளை தாபித்தும், சைவத்தமிழ்த் தொண்டு புரிந்தவர்களுள் காசிபர் கோத்திர அந்தணர்கள் முத லிடம் பெற்றனர். காசிவாசி செந்திநாத ஐயர், பிரம்மஸ்ரீ க. சுந்தர மூர்த்தி ஐயர், பிரம்மஸ்ரீ. இ. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் போன்றவர்களின் தொண்டுகள் தெல்லிப்பழை மக்களால் என்றும் மறக்க முடியாதவை.

பிரம்மஸ்ரீ. மு. சிவகடாட்சக் குருக்கள் அவர்களும் அத்தகைய மரபில் தோன்றி மக்கள் மனதை ஈர்க்கும் வகையில் தொண்டாற் றியவர் ஆவர். குருக்கள் அவர்கள் பிரம்மஸ்ரீ. முத்துக்குமாரசுவா மிக் குருக்கள் அவர்களின் புதல்வர் ஆவர். பழம் பெருமை வாய்ந்து விளங்கும் ஸ்ரீ காசிவிநாயகர் ஆலயத்தின் பூசகராக விளங்கியும், ஆலயத்தைப் பேணியும், சூழவுள்ள மக்களுக்குத் தெய்வ வழிபாட் டின் சிறப்பைப் பரப்பியும் அரும் பெரும் தொண்டு புரிந்தவர். தெல்லி மகாதனைக் கோணேசீமா வைரவர் ஆலயப் பூசைப் பொறுப்பையும் நிர்வகித்து வந்தவர். சைவமும், தமிழும், கற்றவர்; செந்தமிழ் சுவைக்கப் பேசுபவர்; குழந்தையுள்ளம் படைத்தவர்; ஆசாரசீல நெறி தவறுதவர். வைதிகக் கிரியைகள் சிறப்புற நடக்கவேண்டு மென்ற பேரார்வம் படைத்தவர். காசிப்பிள்ளையாரையே தம் உயி ரிலும் மேலாக மதித்து போற்றி வந்தவர்.

பிள்ளைகளே பிற்கால உலகம் என்ற பேருண்மையை உணர்ந்த குருக்கள் அவர்கள் இற்றைக்கு 25 ஆண்டுகளுக்குமுன் பெரியோர் ஆதரவுடன் பாலர் ஞானோதயசபையைத் தாபித்து சமய வகுப்பு களை நடாத்தியும், திருமுறைப் போட்டி, பேச்சுப் போட்டி என்ப வற்றை ஆண்டுதோறும் நடாத்தியும், பரிசளிப்பு விழாக்கள் பல கொண்டாடியும் களித்தவர். இவ்வரிய சபையின் மூலம் ஆற்றி வந்த தொண்டுகளினுல் மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தவர். ஒழுக் கம், ஆசாரம் என்பன பிள்ளைகளிடையே பரவ வழிகாட்டியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்ததுமன்றித் தேவார திருவாசகங்களை அவர்கள் பூரட்டிப்பரவவும் இனிமையான சொற்பொழிவுகள் நிகழ்த்தவும் நன்கு பயிற்றி வந்தார்.

பாலர் ஞானோதய சபையின் வெள்ளிவிழாவைக் கண்டும், காசி விநாயகர் ஆலயத் திருப்பணியைப் பூர்த்தியாக்கிக் கும்பாபிஷேகக் காட்சியைக் கண்டும், களிக்கவேண்டுமென்று ஆவலுற்றிருந்த குருக்கள் அவர்களின் பிரிவு எதிர்பாராத நிகழ்ச்சியாகும். அன்னாரது அருந்தவப் புதல்வர் தந்தையாரவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சிறந்த தொண்டு செய்து வாழக் காசிவிநாயகர் அருள் பாலிப்பாராக.

---

# விநாயக பக்தர்

ஆ. கனகசபை
ஓவசியர் - மராமத்து இலாகா,
பொருளாளர் காசிவிநாயகர் ஆலய திருப்பணிச் சபை

தெல்லிப்பழை — காசியிற்பிள்ளையார் கோவில் பிரதம குருக்களாக விளங்கி அண்மையில் காலஞ்சென்ற குருக்கள் ஐயா அவர்களை எனது சிறுவயதில் இருந்தே தெரியும். அவர் விநாயகரிடத்தில் தீவிர பக்தி உடையவர். தன்னுடைய வாழ்க்கையையே விநாயகப் பெருமானுக்கு அர்ப்பணித்தவர். கோயில் கொடியேற்றம் நடந்து சிறப்பாக மிளிர வேண்டும் என்னும் பெருவிருப்புடன் பல்லாண்டு காலமாகப் பணிபுரிந்து வந்தவர். கொடியேற்றுவதற்கு வேண்டிய உபகரணங்கள் யாவற்றையும் தனது செலவில் செய்வித்துப் பல்லாண்டுகளாக வைத்திருந்தவர். அன்னாரின் பேரார்வத்தினால் உந்தப்பட்ட நாம் சென்ற மூன்று ஆண்டு காலமாகத் திருப்பணிச் சபை மூலம் திருப்பணிகளை நிறைவேற்றி வந்தோம். எதிர்வரும் தைமாதம் கும்பாபிஷேகத்தை அவர் கண்டு களிக்கும் வகையில் நிறைவேற்றிவிடுவோம் என்று பெரும் ஊக்கத்துடன் பணியாற்றி வந்தோம். ஆனால் திடீரென 14–12–70இல் விநாயகப் பெருமானின் திருவடியில் இரண்டறக் கலந்துவிட்டார். அவரது உடம்பு அழிந்த போதிலும் ஆத்மா உறுதுணையாக நின்று திருப்பணிகளை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கும் என நம்புவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தண்மை பூண்டொழுகிய அந்தணர் திலகம்

நம. சிவப்பிரகாசம். வழக்கறிஞர், இந்து சாதன ஆசிரியர்.

திருநெறிச் செம்மையில் நின்ற சிவப்பிராமண உத்தமர்களில் ஒருவர் தெல்லிநகர் பிரம்மஸ்ரீ சிவகடாக்ஷக்குருக்கள். மறையோதும் நெறியில் நிறைவுள்ள பண்பாளர். இப் பெருந்தகையாளர்

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழு கலான்."

என்ற பொய்யா மொழியை இலட்சியமாகக் கொண்டு குருக்கள் அவர்கள் கலை பயிற்றும் துறையிற் பணியாற்றியபின் திருக்கோயிலில் மன்றம் அமைத்துச் சின்னஞ் சிறார்களுக்கு நன்னெஞ்சில் நமச்சிவாய நாமம் மன்றுவான் திருமுறை பயிற்றும் தொண்டினை மேற்கொண்டார்.

பூசைசெய்யும் புண்ணியப்பேறு மட்டும் போதாது அருச்சிக்கும் அன்பால் யாவரும் திருச்சிற்றம்பலம் என்று தொடங்கித் தேவார திருவாசகம் ஆதியாம் பன்னிரு திருமுறைகளையும் ஓதி உவக்கும் வண்ணம் ஞானோதய சபையை நிறுவிப் பல்லாண்டுகளாக உழைத்தவர். இந் நற்றவசீலர் சைவ மாணுக்கர்களால் என்றும் நன்றி பாராட்டுக்குரியவர் ஆவர்.

ஆம் பொருள் நமதேயாஞல் அறம் பிறர்க்காவதுண்டோ! என்ற புராணப் பொருளைச் சைவ அன்பர்களிடம் எடுத்துரைத்து அவர்கள் சைவ நற்ருெண்டாற்றும் பணியிற் பணம் உவந்து கொடுக்க வைத்தனர். செம்பொருள் அடியார் சந்தும் மேலதிகமான விரயத்திற்கு தம்பொருள் விட்ட அன்பாளராகையினுல் இவர் செய்து வந்த சைவத்தொண்டு என்றும் நின்று நிலவக்கூடியதாகவிருந்தது.

பிள்ளையார் பெருமானைக் குலதெய்வமாக உள்ளத்துணர்ச்சியுடன் பூசித்து வந்து அவ்வப்பொழுது அருளும் பெற்றுணர்ந்தவர். இவ் உத்தமர் கள்ளம் கபடமில்லா உள்ளம் படைத்தவர். குருக்களின் தவப்பயனுக அந்தணகுலச் செந்தண்மை சந்ததி சந்ததியாக வந்து பெருக நன்மகப் பேறும் பெற்றனர். சற்புத்திரன் சிவஸ்ரீ கணேசலிங்க ஐயர் சால்புடைத் தந்தையின் வழி கற்றுத் தேறி அந்தணர்க்குற்ற பணியை நன்கு ஆற்றி வருவது சிவபதமடைந்த குருக்களின் பெருமைக்கோர் சான்று.

காசிப்பிள்ளையார் கோவிற்ருெண்டு குருக்களுக்குச் சைவ உலகில் நிலையான தகைமையை அளித்திருக்கின்றது. "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற தேவாரத் தேன்மொழிக்குக் குருக்கள் ஓர் எடுத்துக்காட்டாவர்.

"காசிப் பிள்ளையார் கருணை அருளாளன்
பூசித்து மாதேவன் பொன்னடிகள் — நேசித்த
சீலன் சிவகடாட்சச் சீர்நாமச் செம்மலீசன்
பாலங் கடைந்தார் பணிந்து"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய பிரதம குருக்கள்
**பிரம்மஸ்ரீ சிவகடாக்ஷக் குருக்கள் அவர்களின்**
மறைவு குறித்து

# அனுதாபம்

சிவத்தமிழ்செல்வி, செஞ்சொற் செம்மணி, பண்டிதை, சைவப்புலவர்
தங்கம்மா அப்பாக்குட்டி

"இறைவன் எமக்கு மானிடப் பிறவி யளித்ததன் நோக்கம் தன்னை வழிபட்டு முத்தியடைவதற்காகவேயாகும்" என்பது நவாலர் பெருமான் நல்வாக்கு. "மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்காய ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக்காக" என்று பாடினார் அருணந்திசிவம். இந்தவகையில் அருள்வாழ்வு வாழ்ந்து எம்பெருமான் திருவடி நீழலை 14 – 12 – 70இல் எய்தியவர் தான் சிவகடாக்ஷக் குருக்கள் அவர்கள். அந்தணர்க்கழகு அருமறை ஆறங்கம் என்றபடி வேதாகமங்களைக் கற்றுத் துறைபோய் அவ்வழி நிற்றலும் செய்தவர். இருமூன்றெய்திய இயல்பினில் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவற்றில் வழுவாதவர். இன்று தெல்லிப்பழையில் சிறந்த பக்தர்களும் தொண்டர்களும் வாழுகின்றார்கள் என்று கூறினால் அதற்கு ஐயா அவர்களே சிறந்த காரணராக மதிக்கப்படுவர். அவர்களுடைய சேவை தெல்லி மக்களின் உள்ளங்களில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

விநாயகப் பெருமான் அவருள்ளத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்தார் என்பதில் மிகையில்லை. அவருடைய வடிவமே விநாயக வடிவம். சிவகடாக்ஷக் குருக்கள் வருகிறார் என்றால் அது பிள்ளையார் எழுந்தருளி வருவதுபோலத் தானிருக்கும். அவருடைய வார்த்தைகள் அனைத்தும் எமக்கு ஆனந்தமளிப்பவை.

**சிறந்த ஆசிரியர், உயர்ந்த சேவையாளர், கலைப்பிரியர்**

பன்னிரண்டு வருட காலம் சேர் கனகசபை வித்தியாசாலையில் சைவமும் தமிழும் கற்பித்து எத்தனையோ மாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களின் உள்ளத்துக்கு ஒளியூட்டியவர். 1946 ஆம் ஆண்டு தொடக்கம் பாலர் ஞானோதய சபையை ஸ்தாபித்து நடாத்தியவர். அச்சபையின் மூலம் திருமுறைகளில் ஒழுங்கான பயிற்சி பெற்றவர் பலர். வார விடுமுறை நாட்களில் தவறாது சமய வகுப்புக்களை நடாத்தினார். போட்டிகள் வைத்துப் பரிசளித்தார். ஆண்டு விழாக்களை வெகு விமரிசையாக நடாத்தினார். இச்ச வகுப்புகளைத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் நடாத்தினார். அன்னாருடைய சேவை ஏட்டில் அடங்குவதன்று அன்றி பேச்சில் அடங்குவதுமன்று. அவருடைய அழியாத் திருப்பணி பாலர் ஞானோதய சபை. அது என்றும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அதேபோல் ஐயா அவர்களும் தெல்லி சைவ மக்களனைவரினது உள்ளங்களிலும் என்றும் அணையாவிளக்கு.

---

## பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் அவர்களின்

### மறைவு குறித்த அனுதாபச் செய்தி

சே. தியாகராசா, முன்னாள் வித்தியாதிகாரி

பிரம்மஸ்ரீ சிவகடாக்ஷக் குருக்கள் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நீண்டகாலத் தொடர்புடையவர். காசி விக்கின விநாயகப் பெருமானையே தன் வாழ்வின் முழுமுதற் பொருளாகக் கொண்டு வாழ்ந்த இவ்வந்தணப் பெரியார் தனது மரபுக்கு இயைய விநாயகப்பெருமானுக்கும் பெருந் தொண்டாற்றினார். காசிப்பிள்ளையார் கோயில் அர்ச்சகராகவும், குருக்களாகவும் இருந்து இவ்வாலய முன்னேற்றத்திற்கு இவர்கள் ஆற்றிய பணி கற்றோர் கல்லாதோர் ஆகிய இரு திறத்தாராலும் போற்றப்படவேண்டிய சிறப்பு மிக்கதாம். ஆலயம் பழுதடைந்து வருவாய் குன்றிய காலத்தும் இவர்கள் இயன்ற வரை முயன்று பூசை நித்தியகருமங்களைச் செவ்வனே ஆற்றி வந்தமை இவர்களின் திறமையையும் விநாயகரிடத்து இவர்கள் கொண்ட பக்தியையும் எடுத்துக்காட்டுவதற்குப் போதுமானதாகும். மார்கழி மாதம் திருவெம்பாவைத் தினங்களில் விநாயகர் ஆலயத்தின் ஆலயமணி தெல்லிநகரெங்கும் அதிகாலையிலேயே ஒலித்துக்கொண்டிருக்கும். குளிருக்கஞ்சிப் படுக்கையை சரணடைந்திருக்கும் மக்களுக்கெல்லாம் தள்ளாத வயதிலும் அதிகாலையிலெழுந்து மாணிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகனரின் திருவெம்பாவையை உருக்கமாகப் பாடும் குருக்கள் அவர்களின் குரல் ''இன்னும் உறங்குகிறீர்களோ'' என்று கேட்பது போல் ஒலிக்கும்.

இவர்கள் விநாயகப் பெருமானுடைய பக்திப் பாடல்களையும் தேவார திருவாசகங்களையும் ஓதும்போது தம்மையும் மறந்து பக்திப் பிரவாகத்தில் அடங்கி ஒடுங்கிக் கண்ணீர் வார மெய்மறந்து உருகும் காட்சியை நாம் காணும்போது அவர்களோடு நம்முள்ளமும் உருகியே தீரும். அந்தண குலத்திற் தோன்றியும் கிரியைகளிலும் பார்க்க இவர்கள் குன்ருத பக்தியையே சிறப்பானதெனக் கருதி வாழ்ந்தார். சின்னஞ் சிறுர்களிடத்து சமயப் பற்றையும் இறை பக்தியையும் வளர்க்கக்கருதிய இவர்கள் பாலகருக்கென ஒரு சபையை அமைத்து அல்லும்பகலும் அச் சபையை வளர்ப்பதற்கு ஓயாது முயன்று தேவார திருவாசகங்களைப் பிள்ளைகள் பண்ணேடும் பக்தியோடும் பாடப் பயிற்றுவித்தார்கள். இச் சபையின் வளர்ச்சி மேலோங்கி வருவதால் இவர்களின் நினைவு இச் சபையால் என்றும் நிலைநிறுத்தப்படும் என்பதில் ஐயமில்லை. இச் சபை மூலமாகச் சங்கீதத்திலும் இளஞ் சிறுர்களுக்கு பயிற்சியளிக்க இவர்கள் விரும்பி அதனையும் செய்து வந்துள்ளார்கள்.

விநாயகப் பெருமானின் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கொடி ஸ்தம்பம் அமைத்து விழாக்களைச் சிறப்பாக ஆற்றவேண்டுமென்பது இவர்கள் உள்ளத்துப் பதிந்த பேரவாவாகும். இவர்களின் முயற்சியால் புனருத்தாரண வேலை ஓரளவிற்கு நிறைவேறிவிட்டது.

ஆனல் இவர் உள்ளூர விரும்பிய கும்பாபிஷேகம் கொடியேற்றம் முதலியன நிறைவேறு முன்னமே இவர்கள் இறைவனடியெய்தினர். ஏனெனில் தனது அருமைமிக்க மகன் அப்பணிகளை நிறைவேற்றிப் பயன் பெறுவதோடு தன் விருப்பத்தையும் நிறைவேற்றுவாரென்னும் நம்பிக்கையால் தள்ளாத வயதில் இந் நிலவுலகில் வாழ விரும்பவில்லைப்போலும்; ஆனல் தந்தையிற் சிறந்த இவர்களின் புதல்வர் இவற்றை நிறைவேற்றி முடிப்பாரென்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மையாற் றணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்

செ. சின்னத்துரை, B. A. இளைப்பாறிய ஆசிரியர், மகாஜனக் கல்லூரி.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிப் போதியா நிற்கும் தில்லைக்கூத்தன் திருவடியைச் சார்ந்து, அடிமைப்பட்டு வாழ்வதே நிலையான நிறைவுள்ள வாழ்வென்றும் மானிடப்பிறவி எடுத்ததின் உண்மைப்பயன் அதுவே என்றும், உணர்ந்து தெளிந்து வாழ்ந்த பெரியார் காலஞ்சென்ற மு. சிவகடாக்ஷக் குருக்கள் ஆவார். செம்மையாற் றணிந்த சிந்தைத் தெய்வ வேதியராய் குருக்கள் அவர்கள் திகழ்ந்தார். அவர் ஓர் சிறந்த பக்தர். தேவார திருவாசகங்களிலும் மிகவும் ஈடுபாடுடையவராய் விளங்கினர். இவ்விடயத்தில் பிராமணர்களுக்கு முன்மாதிரியாக அவர் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகவும் பழமை வாய்ந்த காசிப்பிள்ளையார் கோவிலில் முப்போதும் திருமேனி தீண்டும் அந்தணராய் அவர் விளங்கினர். விநாயகப் பெருமானே அவரது வழிபடு தெய்வம். அவரே அன்னாரின் உபாசனமூர்த்தியாகும். இப் பிராமண உத்தமர் விநாயகப் பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்ததோடு நில்லாது தெல்லிப்பழைக் கிராமத்திலுள்ள சைவப் பிள்ளைகளுக்கு சைவத்திருமுறை பயிற்றுவிப்பதே தனது முக்கிய தொண்டாகவும் கொண்டார். மந்திர வடிவான திருமுறைகளே தமிழர்களின் பெரும் செல்வம் என உணர்ந்து பச்சிளங் குழந்தைகளின் உள்ளத்தில் பதியச் செய்து அவர்களைப் புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறியொழுகச் செய்த உத்தம சீலராக ஐயா அவர்கள் விளங்கினர். ஏறக்குறைய 25 ஆண்டுகளாக இத் தெய்வப் பணியைப் பயபக்தியோடு நடாத்தினர். தாம் நிறுவிய தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 24 ஆண்டு விழாக்களை நடாத்தியும் பரிசில் வழங்கியும் திருமுறை வகுப்பு, சமய வகுப்பு, மிருதங்க வகுப்பு முதலியன நடாத்தியும் ஓர் சைவச் சூழலை தெல்லிப்பழையில் உண்டாக்கினர். காசிப் பிள்ளையார் கோவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லின் கும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்க வேண்டுமென்று அவர் வீணவாக் கொண்டார்.

இத்தகைய பெருமை வாய்ந்த ஐயா அவர்களின் ஆத்மா சாந்தி அடைகுக. அவரால் தொடக்கி நடாத்தப் பட்ட பாலர் ஞானேதய சபை என்றென்றைக்கும் தண்ணளி பரப்பி நிலேக்குக.

---

## கலேக்கோயில் அமைத்த சிற்பி

ஆ. ஞானசேகரம், காரியாதிகாரி காரியாலயம், தெல்லிப்பழை

தெல்லிநகர் காசிவிநாயகராலய ஆதீனகர்த்தாவும், தெல்லிப்பழை பாலர் ஞானேதய சபை ஸ்தாபகருமாகிய பிரம்மஸ்ரீ சிவகடாஷக் குருக்கள் அவர்கள் சிவபதமடைந் தது குறித்து எனது துக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரம்மஸ்ரீ சிவகடாஷக் குருக்கள் அவர்கள் 1946இல் தன் விடாமுயற்சியால் இவ்விறைவாழ் சைவப் பெரியார் களின் ஆதரவுடன் பாலர் ஞானேதய சபையை ஸ்தா பித்தார். ஷெ சபையில் முதல் சேர்ந்த மாணவர்களுள் யானும் ஒருவராயிருந்தமையால் குருக்கள் அவர்களின் விடா முயற்சியையும் பக்தியையும் அன்பையும் அறியக் கூடியவனுக இருக்கின்றேன். அன்று தேவார திருவாசகங் களேச் சபை அங்கத்தவராகிய மாணவர்களுக்குப் போதித் தலிலும், நாயன்மார் குருபூசைகளேத் தவருது செய்து மாணவர்களேப் பங்குபெறச் செய்வதிலும் முயன்ற சபை, இன்று அத்துடன் இயலிலும், இசையிலும் பல மாணவர் களேப் பயிற்சி பெறுவதற்கு உதவும் ஒரு கலேக்கோயிலா கத் திகழ்கிறது. அன்று குருக்கள் அவர்கள் ஸ்தாபித்த பாலர் ஞானேதய சபை இன்று அவர்களின் தவப்புதல் வர் பிரம்மஸ்ரீ கணேசலிங்க ஐயா அவர்களின் தலேமையில் என்றும் ஓங்கி வளரும் என ஆசீர்வதித்து, குருக்கள் அவர் களின் நாமம் இக்கலேக்கோயிலின் வளர்ச்சியால் என்றென் றும் எல்லாச் சைவப் பெருமக்களின் உள்ளங்களிலும் நிலே பெற்று விளங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஐயா

ம. சி. சிதம்பரப்பிள்ளை - கல்வி அமைச்சு, கொழும்பு - 2

தெல்லிப்பழை — பாலர் ஞானோதய சபை
ஆரம்ப இயக்குனர்

திருச்சிற்றம்பலம்

இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புக்குரிய **பெரிய ஐயாவை** பாலர் ஞானோதய சபைச் சிறார்களும் பெற்றோர்களும் எவ்வாறு மறக்கமுடியும்? மறக்க முடியாத பெருமக்கள் வரிசையில் **பெரிய ஐயா** அவர்கள் – ஆர – அமர இருந்துவிட்டார்!

விநாயகப் பெருமானின் பூரண கடாட்சத்தைப் பெற்ற பெரும் பேற்றினாலன்றோ, எங்கள் **ஐயா** இத்தனை நெடுங் காலமாக எங்களுக்குக் காட்சி தந்து, எங்களை அன்பு காட்டி அணைத்து வழிப்படுத்தினார்!

பெற்ற புதல்வன் ஒருவனுடன் பெறாத புதல்வர் – புதல்விகளையும் ஒன்றுசேர்த்து இறைபணி புரிய வழிவகை வகுத்து, சைவப் பயிரைச் செளிப்புற வளரப் பற்பல பணிகள் பல்கால் புரிந்தார்!

கண்கண்ட தெய்வமாக, காசிவிநாயகர் ஆலயத்தில் காலம் எல்லாம் கடமைகளைப் புரிந்து, காலனுக்கும் அஞ்சாது, கடைசிவரை அநுட்டான விதிகளோடு பூசை வழிபாடு புரிந்து புதுவாழ்வு புகுந்துள்ளார்!

ஐயா விட்டுப் போன பணியை
மெய்யன்புடன் புரிவோமாக!

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தணர் என்போர் அறவோர்............

திருமதி சிவானந்தவல்லி கனகநாயகம் அவர்கள்

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகலால்" என்பது வள்ளுவர் வாக்கு. இத் தகைய உயர்வு நிறைந்த அந்தணர் மரபிலே பிறக்கும் தவம் உடைய வர். யாழ்ப்பாணத்து அந்தணப் பெரியார் கவி வித்துவான் கணே சையர் அவர்களுடன் உயிர்நட்புப் பூண்டவர். வித்துவான் கணே சையர் அவர்களால் இயற்றப்பெற்ற மருதடி விநாயகப் பிரபந்தத் தின் சாரத்தைத் தனது மனதில் நன்கு எழுதிக்கொண்டவர் எங்கள் குருக்கள்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன் என முதலாவ தாக வைத்துப் பேசப்படும் அந்தணர் மரபிலே தோற்றிய போதி லும், தன்னை ஒரு அந்தணனைக் கருதிப் பெருமையடையாதவர் எங்கள் குருக்கள். தன்னை ஓர் அடியானைக் கருதி அளவு கடந்த பெருமையும் ஆனந்தமும் அடைந்தவர். விநாயகப் பெருமானுடைய திருவடிகளையல்லாமல் பிறிதொன்றைச் சிறிதும் சிந்தித்து அறியாத வர். விநாயகப் பெருமானுடைய திருவுருவத்தைப் பூஜித்தும் தியா னித்தும் தம் திருவுள்ளத்திற் பல அனுபவங்களைப் பெற்றவர். அந்த அருள் அனுபவங்களைப் பேசி மகிழவும் அந்த அருள் அனுபவங்களைத் தெளிவாகக் கொள்ளவும் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் எழுந் தருளியுள்ள யோகர்சுவாமிகளிடம் அடிக்கடி போய்வருவார். யோகர் சுவாமிகள் அன்பர்கள் வீட்டிற்கு எழுந்தருளும்போது அத்தருணத் தைத் தவறவிடாது ஆவலுடன் விரைந்துவந்து சுவாமி தரிசனஞ் செய்து யோகர்சுவாமிகளின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி மகிழ்வார். வீழ்ந்து வணங்குவதுடன் அமையாது யோகர் சுவாமிகள் ஆசனத்தில் அமரும்போது தாமும் ஆசனத்தில் அமரக் கூடாது என்னும் உள்ளக் குறிப்புடன் நிலத்தில் அமர்வதற்கு ஆயத்த மாவார். யோகர்சுவாமிகள் அவருடைய கைகளை இறுகப்பற்றிப் பக்கத்து ஆசனத்தில் அமர்த்தி சும்மா இரும் ஐயரே, கடவுள் உம்முடன் கூட இருக்கிறூர் என்பார். சூரியனைக் கண்ட தாமரை போல, முகம் மலர குருக்கள் விநாயகப் பெருமானின் கோயிலி லுள்ள பல குறைகளையும் எடுத்துச்சொல்லி முறையிட்டு ஆறுதல் அடைவார். யோகர்சுவாமிகளும் குருக்கள் கூறுவதை மிகப் பொறுமையுடன் கூர்ந்துகேட்டு பல ஆறுதல் மொழிகளையும் கூறி வேறுபல விஷயங்களையும் அவரோடு கலந்துபேசி குருக்களுக்கு விடை கொடுத்து அனுப்பி வைப்பார். விநாயகப் பெருமானையன்றி வேறு எந்தத் தெய்வத்தையும் சிந்தித்தும் அறியாத சிவகடாக்ஷக் குருக்கள் அவர்கள் யோகர்சுவாமிகளின் திருமுன்னிலையை நாடிவந்து அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுச் செல்வதைக் காணும்போது எங்களது சாதாரண மனமும் உருகும், கண்களில் கண்ணீர் துளிக்கும்.

தெல்லிப்பழையிலே சிவகடாக்ஷக் குருக்களாற் பூசிக்கப்பெற்ற விநாயகக் கோயில் திருக்கேதீஸ்வரத்துக் கோயில் போல புகழ் பெற்ற கோயில் அல்ல. 1919ஆம் ஆண்டு புதிதாக வேளாளப் பிரபுகளாற் கட்டப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற கோயிலாகும். ஐம்பது ஆண்டுகளுட் பழமை அடைந்து உருக்குலைந்து கிடக்கும் அக் கோயிலில் இன்னும் கும்பாபிஷேகம் செய்யவேண்டிய நிலையிலேயே இருக்கிறது. இந்தக் கோயிலிற் கொடியேற்றஞ்செய்து காணவேண்டுமென்பது குருக்கள் அவர்களின் நீண்டகால ஆத்ம தாகமாகும். தலைசிறந்த அன்பராகிய குருக்களின் அன்பிலே மூழ்கித் திளைத்து நிறைவுகண்ட விநாயகப் பெருமான் பெரும் பெரும் செலவில் அமையும் கொடியேற்ற விழாவை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லையோ? யாது காரணமோ கோயிலிற் கொடியேற்றம் நடைபெறவில்லை.

---

## பொன்னார் திருவடியை........ ...

நா. தவநாதன், செயலாளர், இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

என்ற வள்ளுவர் வாக்குக்கமைய வாழ்ந்து அழியாத பேரின்ப நிலையை அடைந்தவர் குருக்கள் ஐயா அவர்கள். அன்னாரின் ஆத்மா குனிப்புடையான் சேவடியில் இன்று கலந்துவிட்டது. அவர்களின் மறைவு தெல்லி இளைஞர்களாகிய எமக்கு ஈடு செய்ய முடியாத நட்டமாகும். சிறு வயது தொடக்கம் எம்மை அருள் வழியில் ஊக்குவித்தவர் ஐயா அவர்களாவர். சின்னஞ் சிறுவர்களாக கொஞ்சு மொழி பேசித்திரிந்த காலத்திலேயே நாம் பாலர் ஞானோதய சபையில் சேர்க்கப்பட்டோம். திருமுறைகளைப் படித்தோம். திருக்கோயில் வழிபாடு செய்யும் முறையை பயின்றோம். கூட்டுப்பிரார்த்தனை செய்தோம். இதற்கெல்லாம் குருவாக எமக்கு வழிகாட்டினார் ஐயா. வெள்ளிக்கிழமையிலும், ஞாயிற்றுக்கிழமையிலும் மாலை நேரங்களில் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புகளும், கூட்டுப்பிரார்த்தனைகளும் காசிவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும். முடிவில் ஐயா தனது கையால் பிரசாத உருண்டை வழங்குவார். அப்பிரசாதம் எமது நாவுக்கு மட்டும் ருசித்ததன்று. உள்ளத்துக்கும் உயிருக்குமே சுவைத்துவிட்டதெனலாம்.

பிராமண உத்தமராகிய குருக்கள் ஐயா அவர்களை தெல்லி இந்து வாலிபர்களும் இளைஞர்களும் சிந்தையிலும் சென்னியிலும் என்றுமே வைத்துப் போற்றுவர் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் பொன்னார் திருவடியை என்னுள்ளத்தில் பூசித்து அமைகிறேன்.

---

# பெருந்தகை பிரிவு

**சனசமூக நிலையம், மகாதனை**

பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் அவர்களின் அகாலப் பிரிவு எம்மைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது. எமது கிராமத்திலுள்ள நரசிங்க வைரவர் ஆலயத்தின் பூசகராக முதலில் எம்முடன் தொடர்பு கொண்ட குருக்கள் அவர்கள் கால ஓட்டத்தில் எமது சிறுர்களுக்கு ஆசிரியராகவும், நோயாளிகளுக்கு வைத்தியராகவும், கிராம மக்களிடையே நடுவராகவும், இறைவன் அருளை அடைவதற்குக் குருவாகவும் விளங்கினுர்.

ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தும் இறைவனுக்குத் தொண்டாற்றுவதிலும், ஆலயங்களில் நித்திய பூசைகள் செய்வதிலும் தவறியதில்லை. மண்ணில் வாழ் மாந்தருக்கு ஏற்படும் நோய்களையெல்லாம் தீர்க்க வல்ல வைத்தியர் இறைவனேயென்றும், அவரின் மருந்து திருநீறே எனவும் நம்பினுர். அவ்வாறே நோய்களைத் தீர்ப்பதில் வெற்றியும் கண்டார்.

குருக்கள் அவர்கள் கடவுள் நம்பிக்கையை மற்றவர்கள் மனதில் உண்டாக்குவதையே தமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார். வருங்கால மன்னர்களாகிய இளஞ் சிறுர்களின் உள்ளத்திலே பக்தியை விதைத்தலே சாலச் சிறந்தது என்பதை உணர்ந்து 'பாலர் ஞானேதய சபையைத் தோற்றுவித்து பல பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகட்கு இடையே 25 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடாத்தி வந்துள்ளார்.

எமது கிராமத்தில் சமய விருத்திச் சங்கம் ஒன்றை நிறுவி சிறுவர்களின் உள்ளம் பண்போடு வளரப் பணிபுரிந்தார். அயராத ஊக்கமும் தளராத உள்ளமும் கொண்டிருந்த குருக்கள் அவர்கள் பிறர் மனத்திலும் அதனைப் புகுத்தினர். அவரின் எடுப்பான தோற்றமும், கணீரென்ற குரலும் மற்றவர்களையும் சுறுசுறுப்பாக்கிச் செயலில் ஆழ்த்தும் தன்மையது எனில் மிகையாகாது.

அவர்களது திடீர் மறைவு சைவ உலகிற்கும் குறிப்பாக எமது ஊருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். தந்தையை இழந்து தவிக்கும் தனயனுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

# எமது பெரிய ஐயா

ந. செல்வநாயகம், உப தலைவர், பா. ஞா. சபை

காசிவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருவாகவும், பாலர் ஞானோதய சபையின் ஸ்தாபகரும் தலைவருமாகவும், மகாதனை நரசிங்க வைரவர் ஆலயத்தின் ஆதீனகர்த்தாவாகவும் ''பெரிய ஐயா'' என யாவராலும் அன்புடன் அழைக்கப்படுபவருமான பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் 14—12—70இல் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரம் அடைந்தோம்.

ஐயா அவர்களின் மறைவு எமது பாலர் ஞானோதய சபைக்கும் எமது கிராமத்திற்கும் ஈடுசெய்யமுடியாத பெரும் நஷ்டமாகும். எமது சிறுபிராயந்தொட்டே ஆலய வழிபாட்டிலும் சமய அறிவிலும் எம்மை ஊக்குவித்து வந்துள்ளார்கள். மாணவர்களை ஊக்கும் பொருட்டு ஆண்டுதோறும் பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கியுள்ளார்கள். ஸ்தாபகர் அவர்கள் தமது வயோதிப காலத்திலும் உடல் நலத்தையும் கருதாது எமது சபையை கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்துள்ளார்கள். வெள்ளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை முடிந்ததும் ஐயா அவர்கள் உள் வீதியை அங்கப்பிரதட்க்ஷணம் செய்வார்கள். அப்போது மாணவர்கள் ஐயா அவர்களுக்குப் பின்னால் சிவநாமவழிகள் படித்துக் கொண்டு வருவார்கள். அக் காட்சி என்றும் நெஞ்சை விட்டு அகலாது. அத்துடன் மாணவர்களை அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்யப் பயிற்றுவிப்பார்கள்.

பெரிய ஐயா அவர்கள் காசிவிநாயகர் கோவிலையும், ஞானோதய சபையையும் இரு கண்களாகப் பேணி வளர்த்து வந்துள்ளார்கள். 1965ஆம் ஆண்டிலே எமது சபையை நடாத்துவதற்கு நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட்டது. நிர்வாகம் பெரிய ஐயாவின் தலைமையின் கீழ் நல்ல முறையில் இயங்கி வந்தது, நமக்கெல்லாம் வழிகாட்டியாகவும், ஆசிரியராகவும், தலைவராகவும் விளங்கி வந்த ஐயாவை இழந்து சபை பெரிதும் அல்லலுறுகின்றது.

---

## "மறைந்த பெரியார்"

**வித்துவான் க. ப. சின்னராசா**
மிருதங்க ஆசிரியர், பாலர் ஞானோதய சபை

சென்ற ஐந்து வருடங்களுக்கு முன் ஒரு நாள் காசி விநாயகர் ஆலயத்திலுள்ள பாலர் ஞானோதய சபைக்கு மிருதங்க வகுப்பு ஆரம்பிப்பதற்குச் சென்றிருந்தேன். அங்கு சென்ற பொழுது ஒரு பக்தி நிறைந்த காட்சியையும் காணக்கூடியதாக இருந்தது. முகத்திலே மலர்ச்சியும் அகத்திலே பக்திப் பரவசமும் தலையிலே பெரிய தலைப்பாகையுடன் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அரையிலே ஒரு நான்கு முழம். கையிலே ஒரு ஊன்றுகோல். மார்பிலே வெண்ணூல். கழுத்திலே ருத்திராட்சம் மாலை. மேனியில் பால்வெண்ணீறு. நெற்றியில் பெரிய பொட்டு. இவ்வளவும் பொலிந்து நிறைந்து விளங்கும் பெரியவர் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் அங்கு வீற்றிருப்பதை என்னல் அவதானிக்க முடிந்தது. அவருக்கு உற்ற துணையாகவும், முன்னின்று நடத்துபவராகவும் அவரது மகன் விளங்கினர். மறைந்த பெரியாரே நாளுக்குத் தேங்காய் உடைத்து விநயக பூசையும் செய்து விபூதிப் பிரசாதம் வழங்கினர். அதன்பின் நான் எனது வகுப்பினை ஆரம்பித்து வைத்தேன். அன்று நான் கண்ட அந்தச் சிவப்பொலிவை, எனது உள்ளத்தில் பதிந்த அந்தப் பெரிய குருக்களாம் பிரம்மஸ்ரீ சிவகடாக்ஷம் அவர்களின் பக்தித் தோற்றத்தை அன்று தொட்டு ஒவ்வொரு வகுப்பிற்கும் செல்லும் பொழுது தரிசித்து அளவளாவிய பின்பே எனது வகுப்பிற்குச் செல்வது வழக்கம்.

பாலர் ஞானேதய சபையின் ஸ்தாபகராகவும், தலைவராகவும், இளைப்பாறிய ஆசிரியராகவும், காசிவிநயகராலய பிரதம குருக்களாகவும் விளங்கிய பிரம்மஸ்ரீ சிவகடாக்ஷக் குருக்களைப்பற்றி ஒரு சில ஆண்டுகளே எனக்குத் தெரியும். அவரது பிற்காலம் முழுவதும் வழிபாட்டிலும், பக்திச் சுவையான பேச்சுக்களிலேயுமே கழிந்தன. எந்த நேரமும் ''ஓம்'' என்னும் பிரணவப் பொருளைப்பற்றிய பேச்சும், நினைவுமே அவருள்ளத்தில் குடியிருந்தன. எந்த ஒரு நிகழ்ச்சியிலும் தாமே முன்னின்று முடிக்கும் திறமை பெற்றவர். மேற்படி தமது ஆலயத்தின் திருப்பணிகளை முடித்து மகா கும்பாபிஷேகத்தையும் கண்டு களித்தபின்பே தான் இறைவனடி செல்லவேண்டும் என்று பெரிதும் விரும்பி இருந்தார். ஆனல் அவரது ஆவல் பூர்த்தியாகு முன் காலன் முந்திவிட்டான். தனது மகனைத் ''தம்பி'' ''தம்பி'' என அழைத்தும் தனது சுற்றத்தவர்களையும் அயலவர்களையும் தமது பக்கத்திலழைத்தும் தமது அறிவுரைகளை வழங்குவதே ஒரு தனியான சிறப்பாகும். ஆனல் இனி அப்படியான உரைகளை, கதைகளைக் கேட்க முடியாது.

இறுதியாக ஒருநாள் வகுப்பிற்குச் சென்றேன். அங்கு அந்த முக்காலியில் வழக்கமாக வீற்றிருக்கும் அந்தப் பெரிய குருக்களைக் காணது அந்த இடம் வெறிச்சோடிக் கிடந்தது. விசாரித்ததில் திடீரெனச் சுகயீனமுற்று ஆஸ்பத்திரிக்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதாக அறிந்தேன். எனது வகுப்பு முடிந்ததும் நேரே ஆஸ்ப்பத்திரிக்குச் சென்று பார்த்தேன். அங்கேயும் தான் கடுமையான சுகவீனமாக இருப்பதையும் மறந்து ''ஓம்'' ''ஓம்'' எனக் கூறிக்கொண்டிருந்தார். இடையிடையே ''தம்பி'' ''தம்பி'' எனவும் அழைத்துக்கொண்டிருந்தார். இரவு 9 – 45 மணிக்கு நான் அவரை இறுதியாகக் கண்டு கொண்டு சென்றேன். விடியற்காலை அந்தப் பெரியார் அந்தச் சிவப்பொலிவு பூமியையும் உற்றார், உறவினரின் பந்தங்களையும் உதறிவிட்டுச் சிவலோக யாத்திரை ஆரம் பித்து விட்டார் எனக் கேள்வியுற்றுத் திடுக்குற்றேன்.

இனி எப்போதுதான் காணப்போகின்றேனோ. ''அந் தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகலால்.'' என்பதற்கமைய வாழ்ந்த பெரியாரின் ஆன்மா சாந்தியடைவதாக. அவரின் பிரிவு தாளா உற்றாருக்கும் உறவினர்க்கும் எனது ஆழ்ந்த அனு தாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

---

# பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்களின் நினைவு மலருக்கு

**இக் கட்டுரையைக் கொடுப்பதில் பெருமையடைகிறேன்**

த. பூ. முருகையா, முகாமையாளர்
திருப்பணிச் சபை உப தலைவர்

குருக்கள் அவர்களின் தந்தையார் ஆலயத்தின் பிரதம குருவாக முன்பு இருந்தார். பின்பு குருக்கள் அவர்கள் பிரதம குருவாக இருந்து சிறிது காலம் விலகியிருந்தார். மீண்டும் எனது தந்தையாரால் இவ்வாலயத்திற்குப் பிர தம குருவாகக் கொண்டுவந்த காலந் தொட்டு அவரு டன் நன்கு பழக வாய்ப்புக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்து சமயத்தை பின்பற்றுபவர்கள் சிலர். வேறுபல காரணங்களுக்காகப் போலி நம்பிக்கை வைத்திருப்பவர்கள் சிலர். குருக்கள் அவர்கள் பூரண நம்பிக்கையின் பேரால், சமய வாழ்க்கை நடத்தினர். எவ்வளவோ கஷ்டங்களுக்கூடாககவும் நம்பிக்கைக்கு விசுவாசமாக நடந்தார். இவரின் பேரவாவின் காரணமாகவும், முயற்சியின் காரணமாகவும், இன்று காசிவிநாயகராலயத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. முற்றுக முடிவுறும் வரைக்கும் குருக்கள் அவர்கள் வாழமுடியாவிட்டாலும் இவ்வேலை சிறப்பாக நடப்பது அவரது மனதிற்குச் சாந்தியைக் கொடுத்திருக்கும் என்பது எனது திண்ணம்.

இவர் இக் கிராமப்பகுதியில் வாழும் சிறுர்களுக்குப் பாலர் ஞானோதய சபையை ஆரம்பித்துச் சிறுவயதில் பிள்ளைகள் நன்னெறியில் செல்லவேண்டும் என்ற விருப்புடன் நடாத்தி வந்தார். இச் சபை ஆரம்பித்த காலத்து இச் சபையில் நான் மாணவனுக இருந்தேன். இருபத்தைந்து ஆண்டு காலமாக நடந்துவரும் இச் சபையில், இப் பகுதிச் சிறுர்கள் பலர் கற்றுப் பயனடைந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இச் சபையைத் தொடர்ந்தும் குருக்கள் அவர்களின் மகன் சி. கணேசலிங்க ஐயர் அவர்கள் சிறப்பாக நடாத்துவதே அவரின் தந்தைக்கு அவர் செய்யக்கூடிய சிறப்பான கடமைகளில் ஒன்றுகும். இதை அவர் சிறப்பாகச் செய்வார் என்பதே எனது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தலைவர் அன்பு இதயம்

செல்வி சரோஜினிதேவி இராசையா
பாலர் ஞானோதய சபை இசை வகுப்பு மாணவி

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்துத்
தம்புகழ் நிறீஇ தாம் மாய்ந்தனரே"

என்பது புறநானூறு கூறும் அருமொழி. நிலையற்ற உலகிலே தம்புகழ் நிறுவி அமரரான பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும். தெல்லிப்பழையில் ஏற்பட்ட சமய விழிப்புணர்ச்சிக்கு ஐயா அவர்கள் பெரிதும் காரணராயிருந்தார். இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளின் முன்னர் அமைந்த பாலர் ஞானோதய சபையின் மூலம் செய்த தொண்டு மக்கள் உள்ளத்திலிருந்து என்றும் மறையாது.

இனிமையாகப் பேசும் சுபாவம், குழந்தையுள்ளம், ஆசாரம் தவறாத பண்பு ஆதியன ஐயா அவர்களின் உருவம். ஒழுக்கம், பண்பு, ஆசாரம் என்பவற்றையே தம் கண்ணாகக் கொள்ளவேண்டும் என்று பிள்ளைகளிடம் எப்பொழுதும் வற்புறுத்தி வந்தார். கூட்டுப் பிரார்த்தனைக் காலங்களில் பாடிய பண்ணிசையும், தொடர்ந்து ஆற்றிய சொற்பொழிவுகளும் என்றும் எம் மாணவ உள்ளங்களிலிருந்து அகலா. ஆரம்ப காலங்களில் நடாத்திய தேவார வகுப்புகளின் தொடர்பாக ஏற்படுத்திய இசை வகுப்புக்களும், வயலின் வகுப்புக்களும் இன்று பெற்றுள்ள வளர்ச்சி தெல்லிப்பழைக்கே ஒரு அழியாத புகழாகும்.

பாலர் ஞானோதய சபையின் வெள்ளிவிழாக் காட்சியைக் காணாமலே அருள் பொதிந்த அன்பு இதயம் மறைந்துவிட்டது. ஆலயத் திருப்பணியை நிறைவு செய்து கும்பாபிஷேகக் காட்சியைக் கண்டு களிக்க ஆவலுற்றிருந்த ஐயா அவர்களின் மறைவு எமது உள்ளத்திற் பேரதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. வெள்ளிவிழாக் காட்சியையும், கும்பாபிஷேகக் காட்சியையும், இசை வகுப்பின் இனிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் தொடர்ந்தும் ஐயா அவர்கள் அமரர் உலகி லிருந்து கண்டு களித்து எம்மை வழிப்படுத்த எல்லாம் வல்ல காசிவிஞயகர் அருள் பாலிக்க வேண்டுகிறேன்.

ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைவதாக.

---

# சோதிச் சுடர்

ஞானேஸ்வரி ம., பழைய மாணவி, பாலர் ஞானோதய சபை

பஞ்சபூதங்களினுல் ஆக்கப்பட்டதே உலகம். தாவரம் உயிர் வர்க்கம் எல்லாம். உலகில் சீவிக்கும் ஜீவாத்மாக்க ளில் பஞ்சேந்திரிய சுதந்திரத்தை அனுபவிக்கும் ஜீவன்கள் சொற்பமே. இப் பஞ்சேந்திரியங்களினூடாகவே நன்மை தீமைகள், சுக துக்கங்கள் யாவும் கணிக்கப்பட்டிருக்கின் றன. இவைகளின் பலாபலன்களைக் கொண்டே மோட்ஷ நரகங்களும் கணிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுலகில் பஞ் சேந்திரிய சுதந்திரங்களை அனுபவித்தவர்களே தென்புலத் தாராவர்.

தெல்லிப்பழை கிழக்கு காசிவிஞயகராலயத்தின் சோதிப் பிளம்பை வளர்த்தெடுத்து அவ் வட்டாரத்தின் இல்வாழ்வாரின் சிறுவர்கள் யாவரினதும் அறிவையும் அற நெறியையும் மேலோங்கச் செய்த வள்ளல் ஸ்ரீலஸ்ரீ மகா குரு முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் சிவகடாக்ஷக் குருக் கள் அவர்களேயாகும். இவ்வறநெறி நன்மைகள் யாவற் றையும் துறந்து, மறந்து அவ்வூர்வாசிகளையும் தென்புலத் தாரையும் பிரித்ததுபோல் நிறுத்தித் தாமும் தென்புலத் தாரைச் சேர்ந்து கொண்டு மக்களைத் தனிக்கச் செய்து வைத்திருப்பது மிகவும் விந்தையே. இப்படியான அற நெறியை அன்புடனூட்டும் மகானையும், தென்புலத்தாரை யும், தெய்வத்தையும் மக்கள்மீது ஜோதி பரிபாலிக்கச் செய்த சோதிச்சுடராகிய எங்கள் குருவையும் எப்போ காண்போமினி என்று ஏங்கித் தவிக்கும் வேளையில் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு ஈடிணையான குரு ஒருவர் மக்களின் அறிவுச் சுடரை மேலோங்கச் செய்யக் கிடைப்பாரா? அல்லது மக்களின் அறிவு இப்படியே புதைக்கப்பட்டு விடுமோ என ஏங்கி வாழா நிற்கவேண்டிய நிலை தெல்லிநகர் மக்களைச் சிக்கெனப் பிடித்துள்ளது. இந் நிலை நன் நிலை ஏற்படவும், எமது குருவின் ஆத்மா சாந்தியடைந்து வீடெய்தி இரண்டறக் கலக்கவும் எல்லாம் வல்ல இறைவனை மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றையும் அற்பணித்து வேண்டுகிறேன்.

---

## சைவ காவலன்

**நா. சிவகுகன்,** பாலர் ஞானோதய சபை மிருதங்க வகுப்பு மாணவன்.

தெல்லிப்பழைக் கிராமம் தன் சைவகாவலன் அமரனுகி விட்டான் என்ற செய்தி கேட்டுத் துயரக்கடலுள் மூழ்கியது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ''பாலர் ஞானோதய சபை'' யைத் தாபித்து இளம் உள்ளங்களில் தெய்வசிந்தனையை ஊட்டி இன்றுவரை அதை இவர் திறம்பட நடாத்தி வந்துள்ளார்.

இவர் சைவத்தை மட்டுமன்றிக் கலையையும் வளர்த்தவர். நான்கு வருடங்களுக்கு முன் பாலர் ஞானோதய சபையின் சார்பாக மிருதங்கம், சங்கீதம் எனும் கலைகளைப் பயில்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்வித்துத் திறமை மிகுந்த ஆசிரியர்களின் உதவியுடன் சங்கீதம், மிருதங்கம், வயலின் போன்றவற்றைக் கற்பித்தார். வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு எம்மைத் தோற்றுவித்தார். மக்களிடையே சைவப்பற்றை வளர்த்தார். எனது சிறுபிராயத்தில் இருந்தே நான் இவரிடம் படித்தவன். அவருடைய நற்பண்பும் நல்லாசிகளும் நற்போதனைகளும் எனக்கு இன்றும் உறுதுணையாகவுள்ளதென்பதை அறியத் தருகிறேன்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்போ காண்போம் எங்கள் பெரிய ஐயாவை ?

**செல்வன் வை. வேனிலான்**, பா. ஞா. சபை சமய வகுப்பு மாணவன்.

பசிகள் பல. அவற்றுள் அறிவுப் பசியும் ஒன்று. அதனை இன்ன தென அறியாதிருந்த காலை எம்மை வரிந்து அழைத்து அப்பசிக்கு உணவையூட்டி எமது மத்தியில் வாழ்ந்துவந்த பிரம்மஸ்ரீ மு. சிவ கடாக்ஷக் குருவே !

எனது மூன்றும் வயதிலேயே என்னை அழைத்து, உன்பால் அணைத்து, "பிடியதன் உருவுமை" என்ற தேவாரத்தை ஆரம்பித்து பக்திச் சிரத்தையுடனும், தாள சுருதியுடனும், கற்றுத்தந்து அறிவுப் பசியோடு பக்தித் தாகத்தையும் தீர்க்க ஆரம்பித்து வைத்தீரே ஐயா ! என்னோடு சிறுவர் சிறுமியர் எல்லோரும் உங்கள் கடாக்ஷத்தில் திளைந்தோம். அறிவு என்பதென்ன, பக்தி என்பதென்ன என்பன வற்றை எம்மனதில் ஆழப் பதியவைத்தீரே ! பண்புடனும் ஆசாரத் துடனும் வாழ வழிகாட்டிய பெரிய ஐயா ! கணபதி கழலடி அடைந்து விட்டீரோ !

இடையிலே நாலுமுழத் துண்டும், கையிலே தண்டும், நெஞ்சிலே தொண்டும் கொண்டு, நெற்றியிலே திரிபுண்டரம் துலங்க, மார்பிலே முப்புரி நூலசைய, தலையிலே பாகையுடன் காசி விநாயகரே காட்சி கொடுப்பதுபோல் அங்கும் இங்கும் உலாவி வருவீரே ! எமக்குச் சிவகடாக்ஷத்தைக்காட்டி அருள்வீரே. இனி எப்போ நாம் உம் உருவைக் காண்போம். சிவகடாக்ஷமான குருவே ! நீங்கள் மறைந் தாலும் உங்கள் உரு எம் மனதிலிருந்து அகலாது. உமை இழந்து தவிக்கின்றோம் ஐயா !

உன் திருப்பாதங்கள் சரண் எங்களுக்கே !
சரணம் ! சரணம் !! சரணம் !!!

---

## ஜோதி அணைந்துவிட்டது

**சொ. கணேஸ்வரி**, பாலர் ஞானோதய சபை சமய வகுப்பு மாணவி

தெல்லி மாநகரை மீளா இருளில் ஆழ்த்திவிட்டு ஜோதி அணைந்து விட்டது. எல்லோராலும் பெரிய ஐயா என அழைக்கப்பட்டவரும், எல்லோரிடையேயும் பிரபல்யமானவரும்,இளம் உள்ளங்களில் சமயப் பற்றை உண்டாக்கியவருமான பிரம்மஸ்ரீ சிவகடாஷக் குருக்கள் அவர்கள் மறைந்துவிட்டார்.

திருஞானசம்பந்தர் மூன்று வயதிலே தேவாரம் பாடினர். ஆனல் தெல்லி வாழ் சிறுர்களைக் குருக்கள் அவர்கள் மூன்று வயதிலே தேவா ரம் பாடவைத்தார். வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தி அவர்களுக்கு பிரசாதம் வழங்கியும், தனது அன்பான பேச் சினல் சிறுர்களைத் தன்வசப்படுத்தியும் சமயப்பற்றை ஏற்படுத்தினர்.

குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தியடைய அவரது புத்திரரும் எங்களால் சின்ன ஐயா என்றழைக்கப்படும் பிரம்மஸ்ரீ கணேசலிங்க ஐயா அவர்களுக்கு சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க அவர் திருநாமம்

(முன்னாள் செயலாளர், பாலர் ஞானோதய சபை)

இன்றோர் பேரிடி. வாழ்வுக்கு வழிவகுத்து வையத்தை வாழவைத்த ஆருயிர் அணைந்துவிட்டது. தெல்லிமாநகர் தனதோர் வழிகாட்டியை இழந்துவிட்டது.

''பொல்லாரின் நினைவு நில்லாதொழியும் நீர்மையுடையதாகும்
நல்லாரின் நினைவு அவர் இல்லாதழியினும் உள்ளத்தே வெள்ளியென
மின்னும்''

மேற்கூறப்பட்ட கூற்றுக்கு இலக்காய் வாழ்ந்தவர்தான் பெரிய ஐயா என அவரது மாணவர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட பிரம்மஸ்ரீ. மு. சிவகடாட்க்ஷக்குருக்கள் ஆவார். அப் பெருந்தகை காலன் வசம் சிக்கிவிட்டார் என்பதை நம்புவது கஷ்டமாகவே உள்ளது. அவரிடம் காணப்பட்ட சேவை உணர்வு, நல்லெண்ணம் இவைகள் இறவாத பண்புகளாகும். பெரிய ஐயா அவர்கள் எம் நினைவில் என்றென்றும் நிலவுவார் என்பதில் ஐயமில்லை.

வாழ்க அவர் திருநாமம்.

பொன்மொழி:

துய்ய வேதனை மெய்யன்போடு தொழுது வருவாய் மனமே அது உனக்கு எந்நாளும் நலம் தரும்.

மு. சிவகடாக்ஷக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்
பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலி யூரானே.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர
வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய்பா திருப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும்
சேவடி போற்றி என்ன.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

கொல்லாமற் கொன்றதைத் தின்னுமல்
குத்திரங் கோள்களவு
கல்லாமல் கைதவ ருேடிணங்
காமல் கனவிலும்பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல்
தோகையர் மாயையிலே
செல்லாமல் செல்வந் தருவாய்
சிதம்பர தேசிகனே.

## தாயுமானசுவாமிகள் பாடல்

கல்லால் எறிந்துங்கை வில்லால் அடித்துங் கனிமதுரச்
சொல்லால் துதித்தும்நற் பச்சிலை தூவியுந் தொண்டரினம்
எல்லாம் பிழைத்தனர் அன்பற்ற நானினி ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே.

தாயினு மினிய நின்னைச் சரணென்று அடைந்த நாயேன்
பேயினுங் கடையன் ஆகிப் பிதற்றுதல் செய்தல் நன்றோ
தீயிடை மெழுகாய் நொந்தேன் தெளிவிலேன் வீணே காலம்
போயின தாற்று கில்லேன் பூரண னந்த வாழ்வே.

## திருமந்திரம்

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

---

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழ் பஞ்சியெனமாயும்
[illegible] எவனருளால்
[illegible] பதியுமுறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றிக்கருமம்
எவனருளால் முடிவுறும் அந்தத்
தடவு மருப்புக் கணபதி
பொற்சரணம் அடைகின்றோம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருந்தா அச்சகம் - தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org